பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 08 2026 SATRUDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 80வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

2. ஒரு கோடி இளையோருக்கு அடுத்த ஓராண்டிற்குள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

3. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 23 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

4. Hormuz நீரிணை விரைவில் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வரும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

5. உலக கோப்பை ஹாக்கிப் போட்டி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் இன்று தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

நாட்டின் 80வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து, உரையாற்றினார்.

மக்களின் பங்களிப்போடு, கடந்த 12 ஆண்டுகளாக இந்தியா புதிய சாதனைகளை படைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு, கடந்த 12 ஆண்டுகளில் படைத்த சாதனைகளையும் அவர் பட்டியலிட்டார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

காதிகிராம தொழில்துறையின் உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், மின்னணு பொருட்களின் உற்பத்தி 7 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மொபைல் ஃபோன் உற்பத்தி 33 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 4 மடங்கு உயர்ந்துள்ளதாகவும், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை 100 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பழமையான சட்டங்கள் அகற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த 21 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காக கொண்டு, மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், போட்டித் தேர்வுகளை எழுதுவதற்கு இலவச இணையப் பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகளின் போது, உண்மையான தகவல்களை பொதுமக்கள் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஒரு கோடி இளையோருக்கு அடுத்த ஒராண்டிற்குள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் 5 முதல் 15 வயதுக்குட்பட்டவர்களின் விளையாட்டுத் திறனை கண்டறிந்து அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

40க்கு மேற்பட்ட நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், இதன் மூலம்,

ஏற்றுமதியாளர்களுக்கும் தொழில்துறையினருக்கும் ஏராளமான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, சுதந்திர தின கொண்டாட்டத்தை ஒட்டி, முதன்முறையாக வந்தேமாதரம் பாடல் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேசியக்கீதமும் இடம்பெற்றது.

பிரதமர் தேசியக்கொடியை ஏற்றிய போது, விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு MI-17 ரக ஹெலிகாப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

செங்கோட்டையில் முதன்முறையாக வந்தேமாதரம் பாடல் இசைக்கப்பட்டதன் மூலம், ஒட்டுமொத்த தேசமும் பெருமிதம் கொண்டதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பிரதமர் உரையில் இளையோர் நலனுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

மாநிலங்களில் முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

தமிழக முதலமைச்சர் திரு. விஜய், சென்னையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் 23 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று திரு. விஜய் அறிவித்தார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 54 செகண்ட்ஸ்)

கேரள முதலமைச்சர் திரு. V.D. Satheesan திருவனந்தபுரத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், லக்னோவில் தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டவர்களின் தியாகம் போற்றுதலுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன், ராஞ்சியில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

தேர்வு முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

வெளிநாடுகளில் இந்திய தூதரகங்களிலும் சுதந்திர தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

இந்தியாவின் சுதந்திர தினத்தை ஒட்டி, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

பெட்ரோல், டீசல் மற்றும் எரிபொருள் ஏற்றுமதி மீதான கூடுதல் வரியை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

இது, இன்று தொடங்கி 15 நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தெலங்கானாவில் ஊரகப் பகுதியில் உள்ள சாலைகள் 16 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ், 2 ஆயிரத்து 145 சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாக தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கிராமங்கள் - நகர்ப்புறங்கள் இடையேயான சாலை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

மேற்குவங்கத்தில் பெண்குழந்தைகளை காப்போம் – அவர்களுக்கு கல்வி கற்பிப்போம் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. Suvendu Adhikari கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

மகளிர் மேம்பாட்டிற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே மகளிர் கல்விக்கான உதவித்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. Suvendu Adhikari கூறினார்.

>>>>>>><<<<<<<

ஒடிசாவில் பெய்து வரும் கனமழை காரணமாக, பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

Baitarani, Budhabalanga மற்றும் Jalaka ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

Balasore, Bhadrak, Mayurbhanj, Keonjhar ஆகிய மாவட்டங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, Sundargarh உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

அருணாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளம் காரணமாக, 4 பேர் உயிரிழந்தனர்.

Dibang பள்ளத்தாக்குப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக, நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இதில் சிக்கிய ராணுவத்தைச் சேர்ந்த ஐந்து பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<<

Hormuz நீரிணை விரைவில் அமெரிக்காவின் ஒரு பகுதியாக அறிவிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

நியூயார்க் அருகே நடைபெற்ற பேரணியில் பங்கேற்று அவர் பேசினார்.

அமெரிக்காவின் தாக்குதல் காரணமாக, ஈரான் ராணுவம் முற்றிலுமாக வலுவிழந்துள்ளதாக திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதற்கிடையே, Hormuz நீரிணை திறக்கப்பட மாட்டாது என்று ஈரான் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை, இந்த நீரிணை திறக்கப்பட மாட்டாது என்றும் ஈரான் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

உலக கோப்பை ஹாக்கிப் போட்டி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் இன்று தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா இன்று Wales-ஐ எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் இப்போட்டி மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

இந்தியா-இலங்கை இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் Galle-யில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இந்தியா, முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை ஒரு விக்கெட் இழப்புக்கு 101 ரன் எடுத்துள்ளது.

இந்தியா பங்கேற்றுள்ள 600-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இதுவாகும்.

>>>>>>><<<<<<<

Brownsburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha - ஈக்வெடாரின் Gonzala Escober இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Nathaniel Lammons - Jackson Withrow இணையை வென்றது.

>>>>>>><<<<<<<

St. Louis செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் Praggnanandhaa இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

>>>>>>><<<<<<<